THE HINDU

17 NOV 2025

# Pondicherry Varsity Vice-Chancellor calls on Lt. Governor K. Kailashnathan

**The Hindu Bureau**
PUDUCHERRY

Pondicherry University Vice-Chancellor P. Prakash Babu made a courtesy call on Lt. Governor and Chief Rector of the University K. Kailashnathan at the Raj Nivas recently.

During the meeting, Mr. Prakash Babu appraised Mr. Kailashnathan of his recent meeting with the Vice-President of India and Chancellor of Pondicherry University C.P. Radhakrishnan in New Delhi.

He also extended an invitation to Lt. Governor to participate in the upcoming 30th convocation ceremony of the institution.



Pondicherry University Vice-Chancellor P. Prakash Babu greeting Lt. Governor K Kailashnathan at the Raj Nivas recently.

A press note from the University said the next convocation for 2021, 2022, 2023 and 2024 batches of students are tentatively scheduled to be held in December. The Vice-Chancellor has also briefed the Lt. Governor about Pondicherry University's recent achievements, including attaining the overall 470th position in Asia, 7th among Central Universities of India, and 63rd position among Indian Universities.

Applauding the institution, the Lt. Governor encouraged the University community to continue to excel. He also extended his congratulations to the Vice-Chancellor on being recently honoured with the prestigious Lifetime Achievement Award conferred on him by the Bioinformatics and Drug Discovery Society in recognition of his contributions to academia and research in the area of neuroscience and drug discovery, the press note said.

17 NOV 2025

புதுச்சேரி மத்திய பல்கலை.யில்

# முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதத்தின் 127-ஆவது பிறந்தநாள் விழா

## தமிழகப் புலவர் குழுவுக்கு நிரந்தரக் கட்டடம் கட்ட முடிவு

**புதுச்சேரி, நவ.16:** தமிழகப் புலவர் குழுவுக்கு நிரந்தரக் கட்டடம் விரைவில் கட்டப்படும் என்று இக் குழுவின் செயலர் மணிமேகலை கண்ணன் தெரிவித்தார்.

தமிழகப் புலவர் குழுவின் 118-ஆவது கூட்டம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் 127- ஆவது பிறந்தநாள் விழா புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் சார்பில் இப் பல்கலைக்கழக மேலாண்மை புல வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை வகித்து கி.ஆ.பெ. விசுவநாதத்தின் மகளும், தமிழகப் புலவர் குழுவின் செயலருமான மணிமேகலை கண்ணன் பேசியது:

என்னுடைய தந்தை கி.ஆ.பெ. விசுவநாதம் தன்னுடைய 60-ஆவது மணிவிழாவில்தான் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் ஆலோசனை அடிப்படையில் புலவர் குழுவைத் தொடங்கினார். 97 வயது வரை வாழ்ந்த அவர், தன்னுடைய இறுதிக் காலத்தில் தமிழகப் புலவர் குழுவைக் கலைத்து விட வேண்டும் என்று நினைத்தார். ஓர் அமைப்பை உருவாக்கி வளர்ப்பது என்பது எவ்வளவு பெரிய காரியம். அதைக் கலைக்க வேண்டாம். நாங்கள் பாதுகாக்கிறோம் என்றோம்.

அப்போது தமிழறிஞர் முத்து கண்ணப்பர் உள்ளிட்ட 4 பேரை அழைத்து, தமிழகப் புலவர் குழுவை பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். மேலும், திருச்சியில் தமிழகப் புலவர் குழுவுக்கு என்று தனியாகச் சொத்துகளை எழுதி வைத்து விட்டுச் சென்றுள்ளார். விரைவில் சென்னையில் தமிழகப் புலவர் குழுவுக்கு என்று தனியாகச் சொந்தக் கட்டடம் கட்ட உள்ளோம்.

இப்போது தமிழகப் புலவர் குழுவின் தலைவராக விஜடி பல்கலைக்கழக வேந்தர் கோ. விசுவநாதன் செயல்பட்டு வருகிறார். அவர் உள்பட பல்வேறு பல்கலைக்கழகங்களின் 5 வேந்தர்கள் இக் குழுவில் இப்போது இருக்கின்றனர்.

இந்தப் புலவர் குழு இன்னும் வலிமையோடு செயல்படும் என்றார் மணிமேகலை கண்ணன்.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புல முதன்மையர் பேராசிரியர் சுடலை முத்து பேசுகையில், இப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைக்கும் வகையில், செயற்கை நுண்ணறிவு மையம் ஒன்றை உருவாக்க மத்திய அரசின் தேசிய கல்வி வாரியம் முயற்சி எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பின்னர் மணிமேகலை கண்ணனின் மகனும், மத்திய அரசின் தேசிய கல்வி வாரிய இயக்குநரகத்தின் இயக்குநருமான க. ஸ்ரீகாந்த் பேசுகையில், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு மையம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

பேராசிரியர் கோ. வீரமணி எழுதிய முத்தமிழ்க் காவலரின் தமிழகப் புலவர் குழு அமைப்பும் பணிகளும் என்னும் தலைப்பிலான நூல் வெளியிடப்பட்டது. இதைப் பேராசிரியர் கு.வே. பால சுப்பிரமணியன் பெற்றுக் கொண்டார்.

தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மறைமலை இலக்குவனார், பேராசிரியை சாரதா நம்பி ஆரூரன், புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலத்தின் துறைத் தலைவர் பேராசிரியர் மூ. கருணாநிதி உள்ளிட்டோர் பேசினர்.

பேராசிரியர்கள் ஆறு. அழகப்பன், பா.வளன் அரசு, கலசலிங்கம் பல்கலைக்கழக வேந்தர் ஸ்ரீதரன், சிவாலயம் ஜே. மோகன், சாந்தகுமாரி சிவகடாட்சம், சீனு. தமிழ்மணி உள்ளிட்ட தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழகப் புலவர் குழுவின் 118 ஆம் கூட்டம், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதத்தின் 127- ஆவது பிறந்தநாள் விழாவில் பேராசிரியர் கோ. வீரமணி எழுதிய முத்தமிழ்க் காவலரின் தமிழகப் புலவர் குழு அமைப்பும், பணிகளும் எனும் நூலை வெளியிட்ட தமிழகப் புலவர் குழுவின் செயலர் மணிமேகலை கண்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள்.